பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 325

பொது நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 07
1986 மார்ச், 20

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களங்களினதும் அரச கூட்டுத்தாபனங்களின்
எல்லாத் தலைவர்களுக்கும்.

**எழுதுநர் மற்றும் அதற்குச் சமமான தரங்களில் சேவையாற்றும் தகுதிக்குக் குறைந்த தரங்களிலான பட்டதாரிகளின் தொகை மதிப்பு.**

அரசாங்க சேவையிலும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் எழுதுநர் சேவையிலும் அதற்குச் சமமான தரங்களிலும் சேவையாற்றும் தகுதிக்குத் குறைந்த சேவை செய்யும் பட்டதாரிகளின் குறைபாடுகளை விசாரணை செய்து யோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு இளைஞர் விவகார தொழில்வாய்ப்புகள் கௌ. அமைச்சர் ஓர் குழுவை நியமித்துள்ளார்.

02. குழுவுக்குத் தேவையான தரவுகளை ஒன்று திரட்டும் நோக்குடன் அரசாங்க சேவையிலும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் தகுதிக்குக் குறைந்த சேவையிலுள்ள பட்டதாரிகளின் தொகை மதிப்பை நடாத்துவதற்கென இளைஞர் விவகார தொழில் வாய்ப்பு அமைச்சு ஒழுங்குகளைச் செய்துள்ளது.

03. உங்கள் அமைச்சில்/திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில் ஆண்டொன்றுக்கு ரூபா. 9,420க்கும் குறைவாக திரட்டிய ஆரம்பச் சம்பளம் கொண்ட பதவிகளிலுள்ள எல்லாப் பட்டதாரிகளின் மட்டிலுமான விபரங்களை இணைக்கப்பட்ட படிவத்தில் கோரப்பட்டவாறு நிரப்பி 1986 ஏப்பிரல் 26ஆம் திகதிக்கு முன்பு பணிப்பாளர், இளைஞர் வேலைவாய்ப்பு திட்டமிடல், இளைஞர் வேலை வாய்ப்புத் திட்டமிடல் பிரிவு, இல. 48 பாக்வே கட்டடம், பாக் வீதி என்ற முகவரிக்கு கிடைக்குமாறு தயவு செய்து அனுப்பி வைக்கவும்.

ஒப்பம்: டி.பி.ஐ.பி.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,